# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின்

கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சார்ந்த (MN-3-2006A) சேவை வகுதியைச் சேர்ந்த

தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சார்ந்த (MN-3-2006A) சேவை வகுதியைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் பதவியில் காணப்படுகின்ற வெற்றிடத்தை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அல்லது புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் தத்துவமளிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் முறைக்கு இணங்க உச்சளவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் அபேட்சகர் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்படுவார். புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

02. **தேவையான தகைமைகள்**

(i) **கல்வித் தகைமைகள்**

விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பாடப் பிரிவுக்கு உரித்தான பௌதீகவியல், இணைந்த கணிதம், தொழில்நுட்பவியலுக்கு விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களிலிருந்து இரண்டு பாடங்கள் சகிதம் மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

சிங்களம்/தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் மற்றொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ii) **தொழில்சார் தகைமைகள்**

மொரட்டுவை பல்கலைக் கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா

அல்லது

தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் தேசிய டிள்ளோமா

அல்லது

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

தொழில் துறை சம்பந்தமான தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 06 எனும் மட்டத்தைச் சேர்ந்த தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகள் காணப்படல்.

(iii) அனுபவம் ஏற்புடையதன்று.

(iv) **உடல்சார் தகைமை**

ஒவ்வொரு வேட்பாளரும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதியளவான சிறந்த உடல் மற்றும் உளவியல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(v) **வேறு தகைமை**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
- சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள திகதியாக ஏற்றுக் கொள்ளப்படுவது விண்ணப்பதாரி குறித்த சகல தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமாகும்.
- யாதாயினுமொரு சமயப் பிரிவின் சமயத் தலைவராக உள்ள எந்த நபரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறமாட்டார்கள்.

03. **சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை பற்றி அரசாங்கம் எதிர்காலத்தில் கொள்ளும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்கள் விதவை, அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கம் அடிக்கடி விதித்துரைக்கின்ற வகையில் தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகைகளைச் செலுத்தல் வேண்டும்.

(ii) இப்பதவி 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014.01.21ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம்01/2014இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அது சம்பந்தமான விளைவாய்ந்தன்மைவாய்ந்த சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய இப்பதவிக்கு நியமனம் பெற்று மூன்று வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சேவையில் இணைந்து கொண்ட மொழிக்கு மேலதிமாக மற்றைய அரசகரும மொழி தொடர்பிலான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்து கொண்டுள்ள அலுவலர்கள் நன்னடத்தைக் காலப்பகுதிக்குள் குறித்த அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஆங்கில மொழி தொடர்பாக க.பொ.த. (சா.த.) பரீட்சையில் திறமைச் சித்தி மட்டத்திலான நிபுணத்துவத்தை தரம் III ஐச் சேர்ந்த பதவியில் 5 வருடங்களை விஞ்ச முன்னர் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களம்சார் ஏனைய

கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ள மொழி மூலமாக இருப்பது, தாங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற மொழி மூலமாகும்.

(vi) இப்பரீட்சைக்கு விசேட தேவைகளையுடைய அபேட்சகர்கள் விண்ணப்பிப்பதாயின் அது பற்றி விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், உரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளையும் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. **வயதெல்லை**

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அதற்கமைய 2007.03.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.03.03 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.

05. **சம்பள அளவுத்திட்டம்**

சம்பளக் குறியீட்டு இலக்கம் :MN3 - 2016

சம்பள அளவுத்திட்டம் : ரூபா 31,040-10x445-11x660-10x730-10x750-57,550.00- தர முறையின் அடிப்படையிலான மாதாந்த சம்பள நிலை :

| *தரம்* | *ஆரம்ப சம்பள நிலை* | *ஆரம்ப சம்பள நிலை (ரூபா)* |
|---|---|---|
| III | நிலை 01 | 31,040.00 |
| II | நிலை 12 | 36,150.00 |
| I | நிலை 23 | 43,480.00 |

குறிப்பு : சம்பளம் செலுத்தல் மற்றும் ஏனைய விடயங்கள் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 மற்றும் அதன் விளைவாய்ந்தன்மைவாய்ந்த சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

06. எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| *பாடங்கள்* | *நேரம்* | *உச்சளவான புள்ளிகளின் அளவு* | *சித்தியடைவதற்கான புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| விடய ரீதியான தொழில்நுட்ப வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 | 40% |

- நுண்ணறிவுப் பரீட்சை பல்தேர்வு வினாக்கள் 50 ஐ உள்ளடக்கிய வினாத்தாளாக இருக்கும்.

07. **வேட்பாளர்களின் ஆளடையாளம்**

- எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைக்கு சகல வகையிலும் முழுமையான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள வேட்பாளர்கள் மாத்திரம் அழைக்கப்படுவார்கள்.
- நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
- நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்:

    (i) தேசிய ஆளடையாள அட்டை;

    (ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

